# கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண்.368/2018

### அ.சா. 3 (LW 5 )

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | காட்டுராஜா | **தொழில்** | |
| **த/க பெயர்** | பழனிச்சாமி | **மதம்** | |
| **கிராமம்** | | **வயது** | |
| **தாலுகா** | | **தேதி** | **28.07.2025** |

1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

1 முதல் 4 எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது அழகர்பட்டியில் குடியிருந்து வருகிறேன். மணல், ஜல்லி வியாபாரம் செய்து வருகிறேன். 03.06.2018 அன்று இரவு 09.30 மணி அளவில் கொடை ரோடு குகாஸ் ஓட்டலில் தேநீர் அருந்திக் கொண்டிருந்தேன். அப்போது சிவப்பு நிற பைக் யமகா பைக்கில் ஒரு 2 நபர்கள் 25 வயது மதிக்கத்தக்க இருவர் சென்று கொண்டிருந்தார்கள். கன்னிமார் நகர் பக்கத்தில் சுமார் 4 நபர்கள் அங்கு பேசிக் கொண்டிருந்தார்கள். அங்கு இருந்த நபர்கள் நண்பர்களாக பேசிக் கொண்டிருப்பார்கள் என நினைத்து ஜல்லி போடும் இடத்திற்கு சென்று விட்டேன். சிறிது நேரம் கழித்து நான் மீண்டும் வந்து பார்த்த போது அந்த இடத்தில் கூட்டமாக இருந்தது. அப்போது ஒரு நபர் கத்தியால் குத்தப்பட்டு காயம்பட்டு கீழே கிடந்தார். அப்போது நான் காவலர்களுக்கு தகவல் கொடுத்தேன். காவலர்கள் வந்து விசாரித்தார்கள். அதன் பின்பு நான் ஊருக்கு சென்று விட்டேன். என்னுடன் பகவதிராஜ் என்பவர் கூட இருந்தார். என்னால் அந்த நபர்களை அடையாளம் காட்ட இயலாது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எ 1 மற்றும் எ 2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

போலிசாருக்கு நான்தான் தகவல் கொடுத்தேன் என்றால் சரிதான். அவர்கள் வரும் வரை நான் அங்குதான் இருந்தேன். நான் சொல்லச் சொல்ல போலிசார் எதுவும் எழுதிக் கொள்ளவில்லை என்றால் சரிதான். என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான்.

<u>3,4 எதிரிகள் தரப்பில் 1,2 எதிரிகள் தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணையை தங்கள் தரப்பு குறுக்கு விசாரணையாக ஏற்றுக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.</u>

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

P VELMURUGAN

Digitally signed by P VELMURUGAN
Date: 2025.07.28 11:46:01 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.